DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.250/2025**

Prosecution **PW.3**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | பார்த்திபன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | மயில்வாகனம் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.02.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் கீழசிந்தலவாடியில் குடியிருந்து UPVC window தயார் செய்யும் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 தாமரை எனக்குத் தெரியும். இறந்து போன மணி என்பவரைத் தெரியும். ஆஜர் எதிரியை சிவக்குமாரைத் தெரியும். (சாட்சி நீதிமன்றத்தில் எதிரியை அடையாளம் காட்டினார்.) 17.01.2022 அன்று மாலை 03.15 லிருந்து 03.30 மணியிருக்கும் நானும் தமிழழகனும் சொந்த வேலையாக கரூர் செல்வதற்காக இருசக்கர வாகனத்தில் லாலாப்பேட்டை பஸ்ஸ்டாண்டியிலிருந்து கரூர் செல்வதற்காக திருச்சி கரூர் ரோட்டில் சென்று கொண்டிருந்தபோது சிந்தலவாடி பிரிவு ரோடு அருகே எங்களுக்கு முன்பாக ராஜு வயல் அருகே ஆஜர் எதிரி Splender Plus TN 49 BU 6770 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் எங்களுக்கு முன்பாக வேகமாக சென்று கொண்டிருந்தார். அப்போது மணி சம்பவ இடத்தில் ரோட்டின் இடது புறமாக ஆடுமேய்த்து கொண்டு நின்று கொண்டிருந்தார்.

2. அப்போது ஆஜர் எதிரியை எங்களை கடக்கும் போது அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஆஜர் எதிரி வண்டியை ஓட்டி வந்து கொண்டிருந்தார். ரோட்டில் நின்று கொண்டிருந்த மணி என்பவர் மீது மோதிவிட்டார். மணி

என்பவரை நானும், தமிழழகனும் தூக்கி பார்த்தபோது தலை, கை, கால், முட்டி, முகம், ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. ஆம்புலன்சுக்கு போன் செய்தோம். ஆம்புலன்ஸ் வந்து தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மணி என்பவரின் மகனுக்கு தகவல் சொன்னோம். தனியார் மருத்துவமனையிலிருநது கரூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றதாக கேள்விப்பட்டேன் பின்னர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன்.

3. விபத்திற்கு யார் காரணம் என்றால் ஆஜர் எதிரி தான் காரணம் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்தது தான் காரணம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. போலிசார் என்னை எங்கு விசாரித்தார்கள் என்றால் விபத்து நடந்த அடுத்த நாள் காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். அன்றைய தேதியில் யார் வண்டியில் யார் ஓட்டிச்சென்றார்கள் என்றால் எனது வண்டியில் நான் ஓட்டி சென்றேன். அ.சா.2 தமிழழகன் எனது பின்னால் அமர்ந்திருந்தார். போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் போலிசார் பதிவு செய்த வாக்குமூலத்தில் என் இருசக்கர வாகனத்தில் இருவரும் சென்றதாகவோ லாலாப்பேட்டை பஸ் நிலையத்தில் இருந்து சென்றதாகவோ, எதிரி எங்களை முந்தி சென்றதாகவோ, பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

2. அ.சா.1 தாமரை எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது பக்கத்துவீட்டில் இருப்பவர். அ.சா.2 தமிழழகன் உறவினர் அல்ல எனக்கு நண்பர் ஆவார். என்ன காரணத்திற்காக லாலாப்பேட்டை பஸ் ஸ்டாண்டிற்கு சென்றோம் என்றால் பணம் வாங்குவதற்காக சென்றோம். விபத்து நடந்து நான் போன் மூலமாக தகவல் சொல்லி மணியின் மகன் வந்தாரா என்றால் ஆம்புலன்ஸ் செல்லும் போது வந்தார். அவர் வந்து தான் விவரங்களைக் கேட்டார்.

3. சத்தம் கேட்டுதான் நாங்கள் சென்று பார்த்து அடிப்பட்டது மணி என்பவர் என்று எங்களுக்கு தெரியவந்தது என்றால் எங்களுக்கு முன்பு தான் விபத்து நடந்தது. விபத்து நடந்த இடம் 3 வாகனங்கள் செல்லும் ரோடு என்றால்

சரிதான். அந்த இடத்தில் பிரிவு ரோடு உள்ளது. அதனால் குறுகிய ரோடாகும். விபத்து நடந்த இடத்தில் பிரதான சாலையில் பிரிக்கும் வண்ணம் நடுவில் தடுப்பு உள்ளது என்றால் உள்ளது. நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றாலும் அங்கு ரோட்டை பிரிக்கும் தடுப்புகட்டை இல்லையென்றால் சரியல்ல.

4. விபத்து நடந்த இடம் மண்ரோடாகும். மண்ரோடு ரோட்டிற்கு எந்த புறம் உள்ள மண்ரோடு என்றால் திருச்சியிலிருந்து இருந்து வரும் இடதுபுறமும் ரோட்டிற்கு தென்புறமும் நடந்தது. என்னை தவிர சுமார் எத்தனை பேர் இந்த விபத்தை பார்த்திருப்பார்கள் என்றால் சுமார் 5 அல்லது 6 நபர் பார்த்திபார்கள். நான் சொல்வது போல் இந்த விபத்து மண் ரோட்டில் நடக்கவில்லையென்றாலும், தார் ரோட்டின் மையப்பகுதியில் நடந்தது என்றாலும், சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அ.சா.1 தாமரை, அ.சா.2 தமிழழகன் சம்பவ இடத்தில் இல்லையென்றாலும் சரியல்ல.

5. அ.சா.1, 2 ஆகியோர்கள் உறவினர்கள் என்றாலும், வழக்கிற்காக உறவினர் இல்லையென்று பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் விபத்து ஏற்பட வில்லையென்றாலும், ரோட்டின் தென்புறத்தில் ஆடுகளை மேய்த்து கொண்டிருந்த மணி ஒரு ஆடு தார்ரோட்டிற்கு ஓடுவதைக்கண்டு அதை தடுப்பதற்காக தார்ரோட்டின் வடபகுதிக்கு வந்தார் என்றும், அப்போது கிழக்கில் எதிரி ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தை கவனிக்காமல் திடிரென்று குறுக்கே வந்து எதிரி ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் தானே மோதி விபத்திற்குள்ளாகி விட்டார் என்றாலும், விபத்து நஷ்டஈடு பெறுவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.02.04 10:52:59 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.